**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# இந்தியா-நேபாளம்: இமாலய உறவு

**புது தில்லி, ஜூன் 1:** 'இந்திய-நேபாள உறவுகள் இமாலய உயரத்தை எட்டும் வகையில், இருதரப்பும் தொடர்ந்து செயலாற்றும்' என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

தில்லியில் நேபாள பிரதமர் புஷ்ப கமல் தாஹால் என்ற பிரசண்டாவுடனான பேச்சுவார்த்தைக்குப் பிறகு அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது, இருநாடுகளுக்கும் இடையே ஏழு ஒப்பந்தங்கள் கையொப்பமாகின.

நேபாள பிரதமர் பிரசண்டா, 4 நாள்கள் அரசுமுறைப் பயணமாக இந்தியாவுக்கு புதன்கிழமை வருகை தந்தார். அவருடன் அமைச்சர்கள் உள்பட பிரதிநிதிகள் கொண்ட குழுவும் வருகை தந்துள்ளது.

தில்லியில் உள்ள ஹைதராபாத் இல்லத்தில் பிரதமர் நரேந்திர மோடி, பிரசண்டா இடையிலான இருதரப்பு பேச்சுவார்த்தை வியாழக்கிழமை நடைபெற்றது.

அப்போது, வர்த்தகம், போக்குவரத்து, இணைப்பு வசதிகள், எல்லைப் பிரச்னை, நீர்ப்பாசனம் உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து இருவரும் விரிவாக ஆலோசனை மேற்கொண்டனர்.

பின்னர், எல்லை கடந்த பெட்ரோலிய குழாய் அமைப்பு விரிவாக்கம், ஒருங்கிணைந்த சோதனைச் சாவடிகள் உருவாக்கம், நீர்மின்சக்தி ஒத்துழைப்பு உள்ளிட்ட ஏழு ஒப்பந்தங்கள் இரு நாடுகளுக்கும் இடையே கையொப்பமாகின. இதில், இருதரப்பு போக்குவரத்து உடன்படிக்கை திருத்த ஒப்பந்தமும் அடங்கும்.

**இமாலய உயரத்தை நோக்கி...:** பின்னர், இருவரும் செய்தியாளர்களுக்கு கூட்டாக பேட்டியளித்தனர். அப்போது, பிரதமர் மோடி கூறியதாவது:

நான் பிரதமரானதில் இருந்து நேபாளத்துடனான உறவை வலுப்படுத்த முன்னுரிமை அளித்து வருகிறேன். கடந்த 9 ஆண்டுகளில் இருதரப்பு உறவு புதிய உச்சத்தை எட்டியுள்ளது. இது பெருமைக்குரியது.

## பிரதமர் மோடி



தில்லியில் பிரதமர் நரேந்திர மோடியை வியாழக்கிழமை சந்தித்த நேபாள பிரதமர் பிரசண்டா.

இருதரப்பு கலாசார, ஆன்மிகத் தொடர்பை மேலும் வலுப்படுத்தும் வகையில், ராமாயணம் தொடர்புடைய சுற்றுப்பயணத் திட்டத்தை விரைவுபடுத்த நாங்கள் முடிவு செய்துள்ளோம்.

இந்திய-நேபாள உறவுகள் இமாலய உயரத்தை எட்டும் வகையில் தொடர்ந்து செயலாற்றுவோம். அந்த உணர்வுடன் எல்லைப் பிரச்னை மற்றும் இதர விவகாரங்களில் தீர்வு காணப்படும் என்றார் பிரதமர் மோடி.

**நேபாள பிரதமர் வரவேற்பு:** 'அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை' என்ற பிரதமர் மோடியின் கொள்கையை வரவேற்பதாக நேபாள பிரதமர் பிரசண்டா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், 'பிரதமர் மோடியின் தலைமையில் இந்தியாவின் பொருளாதாரம் மற்றும் வளர்ச்சி குறிப்பிடத்தக்க அளவில் ஏற்றம் கண்டிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. நேபாளம், இந்தியா இடையிலான உறவுகள் நீண்ட பாரம்பரியமும் பன்முகமும் கொண்டவை.

ஒருபுறம் நாகரிகம், கலாசாரம், சமூக-பொருளாதார தொடர்புகள், மறுபுறம் சமத்துவ இறையாண்மை, பரஸ்பர மரியாதை, புரிதல் மற்றும் ஒத்துழைப்பை இந்த உறவுகள் கொண்டுள்ளன. வர்த்தகம் உள்பட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து விரிவாக விவாதித்தோம்' என்றார்.

## எல்லைப் பிரச்னைக்கு தீர்வு

இந்தியா- நேபாளத்துக்கு இடையேயான எல்லைப் பிரச்னைக்கு நட்பு ரீதியில் தீர்வு காணப்படும் என்று இரு நாட்டு பிரதமர்களும் கூட்டாக வெளியிட்ட அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அடுத்த 10 ஆண்டுகளில் நேபாளத்தில் இருந்து தில்லிக்கு பெறப்படும் மின்சாரத்தின் அளவு, 10 ஆயிரம் மெகாவாட்டாக அதிகரிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது இது 450 மெகாவாட்டாக உள்ளது.

## திட்டங்கள் தொடக்கம்

பிரதமர் மோடி-பிரசண்டா பேச்சுவார்த்தைக்குப் பிறகு, இந்தியா-நேபாளம் தொடர்புடைய பல்வேறு திட்டங்களை காணொலி முறையில் இருவரும் தொடங்கி வைத்தனர். மேலும், புதிய திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டினர்.

உத்தர பிரதேசத்தில் இந்திய-நேபாள எல்லையில் உள்ள ருபைதிஹா பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மாநிலத்தின் முதல் நிலத் துறைமுகம் திறந்துவைக்கப்பட்டது. 115 ஏக்கரில் ரூ.200 கோடியில் செலவில் கட்டமைக்கப்பட்ட இந்த நிலத் துறைமுகம், சரக்கு மற்றும் பயணிகள் வாகனங்களின் சமூக போக்குவரத்தை உறுதி செய்யும் நோக்கில் இந்திய நிலத் துறைமுக ஆணையத்தால் அமைக்கப்பட்டுள்ளது.

இதேபோல், நேபாளத்தின் நேபாள்கஞ்ச் பகுதியில் ஒருங்கிணைந்த சோதனைச் சாவடியும் திறந்துவைக்கப்பட்டது. பிகார்-நேபாளம் இடையிலான சரக்கு ரயில் சேவையும் தொடங்கப்பட்டது.

# கலாசார செறிவுமிக்க தமிழகத்தில் பணியாற்றுவது கௌரவம்

## சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி எஸ்.வி.கங்காபுர்வாலா

**சென்னை, ஜூன் 1:** கலை, கலாசார செறிவு கொண்ட தமிழகத்தில் பணியாற்றுவது கௌரவமானது என சென்னை உயர்நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதி எஸ்.வி. கங்காபுர்வாலா தெரிவித்தார்.

சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக எஸ்.வி. கங்காபுர்வாலா கடந்த 28-ஆம் தேதி பொறுப்பேற்றுக்கொண்டார். அவருக்கு ஆளுநர் ஆர்.என். ரவி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

கங்காபுர்வாலாவுக்கு உயர்நீதிமன்றம் சார்பில் வியாழக்கிழமை வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. அப்போது அவர் பேசியதாவது: கலை, கலாசார செறிவு கொண்ட தமிழகத்தில் பணியாற்றுவது கௌரவமானது.



சென்னை உயர்நீதிமன்றத்தில் வியாழக்கிழமை அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சியில் பேசிய புதிய தலைமை நீதிபதி சஞ்சய் விஜயகுமார் கங்காபுர்வாலா. உடன் நீதிபதிகள் எஸ்.வைத்தியநாதன், ஆர். மகாதேவன்.

சென்னை உயர்நீதிமன்றம் பல உச்சநீதிமன்ற நீதிபதிகளையும், சட்ட வல்லுநர்களையும் தந்துள்ளது. இளையவர்களும் அந்த பெருமையைத் தொடர்ந்து அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டும். தமிழகத்தின் மரபு, கலாசாரங்களைப் பின்பற்றி வாழ்வேன் என்றார் அவர்.

இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசின் தலைமை வழக்குரைஞர் சண்முகசுந்தரம், தமிழ்நாடு, புதுச்சேரி பார் கவுன்சில் தலைவர் அமல்ராஜ் மற்றும் வழக்குரைஞர்கள் சங்க நிர்வாகிகள், மூத்த வழக்குரைஞர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## மேக்கேதாட்டு அணை திட்டம்

# தமிழகத்துக்கு எந்தவித பாதிப்பும் இல்லை: கர்நாடக துணை முதல்வர் டி.கே.சிவகுமார்

**பெங்களூரு, ஜூன் 1:** மேக்கேதாட்டு அணை திட்டத்தால் தமிழகத்துக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என கர்நாடக துணை முதல்வர் டி.கே.சிவகுமார் தெரிவித்தார்.

காவிரி ஆற்றின் குறுக்கே மேக்கேதாட்டு அணை திட்டத்தைச் செயல்படுத்தும் முடிவிலிருந்து பின்வாங்கும் பேச்சுக்கே இடமில்லை என நீர்வளத் துறையைக் கவனிக்கும் கர்நாடக துணை முதல்வர் டி.கே.சிவகுமார் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலடி கொடுத்து, தமிழக நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அறிக்கை வெளியிட்டிருந்தார். அதில், மேக்கேதாட்டு அணை குறித்து டி.கே.சிவகுமார் தெரிவித்திருந்த கருத்துக்கு கண்டனம் தெரிவித்திருந்தார்.

இது குறித்து பெங்களூரு காங்கிரஸ் அலுவலகத்தில் செய்தியாளர்கள் வியாழக்கிழமை எழுப்பிய கேள்விக்கு பதிலளித்து, கர்நாடக துணை முதல்வர் டி.கே.சிவகுமார் கூறியதாவது: மேக்கேதாட்டு அணை திட்டத்தைச் செயல்படுத்தக் கோரி நடைப்பயணம் மேற்கொண்டிருந்தோம். மேக்கேதாட்டு அணை திட்டத்தால் தமிழகத்துக்கு எவ்வித பாதிப்பும் இல்லை. மேக்கேதாட்டு அணை திட்டத்துக்கு நிதிநிலை அறிக்கையில் ரூ. 1,000 கோடி ஒதுக்கி அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தது. ஆனால், அந்த நிதி செலவிடப்படவில்லை. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான முன்னேற்பாடுகளில் ஈடுபட வேண்டியுள்ளது.

தமிழகம் மீது எங்களுக்குப் பகைமை இல்லை. தமிழகத்துக்கு எதிராகப் போராட வேண்டுமென்பதும் இல்லை. அந்த மாநிலத்தில் இருப்போரும் நமது சகோதரர்கள்தான். அவர்களின் சகோதரர்கள் இங்கும் இருக்கிறார்கள். யார் மீதும் பகைமை பாராட்டுதல், பொறாமை கொள்ளவேண்டிய அவசியம் இல்லை.



**தமிழகமும் பயனடையும்:** கர்நாடகம் வகுத்திருக்கும் மேக்கேதாட்டு அணை திட்டத்தால் தமிழகமும் பயனடையும். கடலில் கலக்கும் தண்ணீரை தமிழகத்தோடும் பகிர்ந்துகொள்வோம். காவிரி ஆற்றுப் படுகையில் இருக்கும் எல்லா விவசாயிகளுக்கும் நாம் உதவி செய்ய வேண்டும். காவிரி ஆற்றில் இருந்து தமிழகத்துக்கு எவ்வளவு தண்ணீரை திறந்துவிட வேண்டுமென்பது தொடர்பாக ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அதைத் திறந்துவிடுவோம்.

கர்நாடகத்தின் நலனைக் காப்பது எங்களது கடமையாகும். அணை கட்டி அதில் மின்சாரம் உற்பத்தி செய்தால் தமிழகத்துக்கு என்ன இழப்பு? அணையில் நீரைத் தேக்கிவைத்து, நடுவர்மன்றம் ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளபடி பெங்களூருக்கு குடிநீர் வழங்கவிருக்கிறோம்.

தமிழகத்துக்கு எந்த வகையிலும் தொந்தரவு தரமாட்டோம். இருமாநிலங்களும் இணைந்து இந்தப் பிரச்னையை சுமுகமாக தீர்த்துக்கொள்வோம் என்றார்.

# சமரசத்துக்கு இடமில்லை: அமைச்சர் துரைமுருகன் திட்டவட்டம்

**வேலூர், ஜூன் 1:** மேக்கேதாட்டுவில் அணை கட்டுவதை தமிழகம் ஒருபோதும் அனுமதிக்காது. இதில் எந்தவித சமரசத்துக்கும் இடம் கிடையாது என்று அமைச்சர் துரைமுருகன் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

வேலூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் குடிநீர் திட்டப்பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்குப் பிறகு அவர் செய்தியாளர்களிடம் கூறியது: மேக்கேதாட்டு அணை இரு மாநில மக்களுக்கும் பயனளிக்கக் கூடியது, இந்த அணை கட்டுவது தொடர்பாக, தமிழக அரசுடன் கலந்துபேசி செயல்படுத்தத் தயாராக இருப்பதாக கர்நாடக துணை முதல்வர் டி.கே.சிவகுமார் தெரிவித்துள்ளார்.

**சிவகுமாருக்கு முழுமையாகத் தெரியாது:** இப்போதுதான் பதவிக்கு வந்துள்ள சிவகுமாருக்கு மேக்கேதாட்டு அணை பிரச்னை குறித்து முழுமையாகத் தெரிந்திருக்கவாய்ப்பில்லை. மேக்கேதாட்டுவில் அணை கட்டினால் தமிழகத்துக்கு கிடைக்கக்கூடிய தண்ணீர் பெருமளவில் பாதிக்கப்படும். எனவே, மேக்கேதாட்டுவில் அணை கட்டுவதை தமிழகம் ஒருபோதும் அனுமதிக்காது. இதில் எந்தவித சமரசமும் கிடையாது.

காவிரியில் மேக்கேதாட்டு அணை மட்டும் பிரச்னை அல்ல; அதை 30 ஆண்டுகளாக கூர்ந்து கவனித்து வருகிறேன். காவிரி தொடர்பான தீர்ப்பாயத்தை நடத்திய அனுபவம் எனக்கு உண்டு.

காவிரியில் இருந்து எவ்வளவு தண்ணீர் தமிழகத்துக்கு வழங்க வேண்டும் என்பதற்காக அமைக்கப்பட்ட தீர்ப்பாயத்திலும் இந்தப் பிரச்னை எழுப்பப்படவில்லை. உச்ச நீதிமன்றத்திலும் இந்த பிரச்சனை எழுப்பப்படவில்லை. ஆனால், கர்நாடக துணை முதல்வர் டி.கே.சிவகுமார், ஏதோ ஒரு பிரச்னையை எழுப்ப வேண்டும் என்பதற்காக பேசி வருகிறார். எந்தக் காரணம் கொண்டும் மேக்கேதாட்டு அணை பிரச்னையை ஒருபோதும் தமிழக அரசு விட்டுக் கொடுக்காது.



வேலூர் மாவட்டம், அணைக்கட்டு வட்டத்திலுள்ள மலைப் பகுதியில் மக்களின் நலன் கருதி, சாலை அமைக்க வனத் துறையிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்தவுடன் சாலை அமைக்கப்படும்.

வேலூர் மாவட்டத்தில் தற்போது காவிரி குடிநீர் விநியோகம் பராமரிப்பு காரணமாக நிறுத்தப்பட்டுள்ளது. பராமரிப்புப் பணிகள் வெள்ளிக்கிழமை (ஜூன் 2) முதல் தொடங்கும். வேலூர் மாவட்டத்தில் குடிநீர் பற்றாக்குறை ஏற்படாமல் இருக்க மாற்று ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று ஆட்சியர், மாநகராட்சி அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் கிடைக்க வழிவகை செய்யப்படும் என்றார் அமைச்சர் துரைமுருகன்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**

**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**

https://www.evastaliniasacademy.in/

**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# மணிப்பூர் வன்முறைக்கு தீர்வு காண அமைதிக் குழு, நீதி விசாரணை

## அமித் ஷா அறிவிப்பு



மணிப்பூர் தலைநகர் இம்பாலில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா.

**இம்பால், ஜூன் 1:** மணிப்பூரில் வன்முறைக்கு தீர்வு காண மாநில ஆளுநர் அனுசுயா உய்கே தலைமையில் அனைத்துக்கட்சிகள், குகி, மைதேயி சமூகங்கள், இதர அமைப்புகளின் பிரதிநிதிகள் அடங்கிய அமைதிக் குழு அமைக்கப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா வியாழக்கிழமை அறிவித்தார்.

மேலும், வன்முறை சம்பவங்கள் தொடர்பாக ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையில் நீதி விசாரணை நடத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

பாஜக ஆட்சி நடைபெற்று வரும் மணிப்பூரில் பெரும்பான்மையாக உள்ள மைதேயி சமூகத்தினர், தங்களுக்கு பழங்குடியின அந்தஸ்து கோரி வருகின்றனர். இந்தக் கோரிக்கையை, குகி மற்றும் நாகா பழங்குடியினர் எதிர்க்கின்றனர்.

இவ்விரு சமூகத்தினருக்கும் இடையே இந்த மாத தொடக்கத்தில் பெரும் கலவரம் மூண்டது. இதில் 80 பேர் வரை உயிரிழந்தனர். ஏராளமான வீடுகளும் வழிபாட்டுத் தலங்களும் தீக்கிரையாக்கப்பட்டன.

இதையடுத்து, ராணுவம் மற்றும் அஸ்ஸாம் ரைஃபிள்ஸ் படையைச் சேர்ந்த 10,000 வீரர்கள் குவிக்கப்பட்டு, நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. எனினும், வன்முறை சம்பவங்கள் அவ்வப்போது நிகழ்ந்து வருகின்றன. பழங்குடியினருக்கு ஆதரவாக அந்தச் சமூகம் சார்ந்த தீவிரவாதிகள், மைதேயி சமூக கிராமங்கள் மீது தாக்குதல் நடத்துகின்றனர்.

இந்நிலையில், மணிப்பூரில் அமைதியை நிலைநாட்டும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, அந்த மாநிலத்துக்கு 4 நாள் பயணமாக மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா திங்கள்கிழமை வந்தார்.

மாநில முதல்வர் பிரேன் சிங், அமைச்சர்கள், உயரதிகாரிகள், பாதுகாப்புத் துறை அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்ட அமித் ஷா, மைதேயி, குகி சமூக பிரதிநிதிகள், தேவாலய தலைவர்கள், பல்வேறு அரசியல் கட்சியினர், சமூக அமைப்பினர், மகளிர் அமைப்பினர் உள்ளிட்டோரையும் சந்தித்து, அமைதி நடவடிக்கைகள் குறித்து விவாதித்தார்.

தனது பயணத்தின் நிறைவாக இம்பாலில் செய்தியாளர்களுக்கு அமித் ஷா வியாழக்கிழமை பேட்டியளித்தார். அப்போது, அவர் கூறியதாவது:

மணிப்பூரில் நிகழ்ந்த வன்முறை சம்பவங்கள் தொடர்பாக ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் நீதி விசாரணை நடத்தப்படும். அதன் விவரம் விரைவில் அறிவிக்கப்படும்.

தற்போதைய பிரச்னைக்கு ஒரே தீர்வு பேச்சுவார்த்தை மட்டுமே. எனவே, மாநில ஆளுநர் தலைமையில் அனைத்து அரசியல் கட்சியினர், குகி, மைதேயி சமூகப் பிரதிநிதிகள், இதர சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய அமைதிக் குழு அமைக்கப்படும். வன்முறையின் பின்னணியில் உள்ள குற்றச் சதிகள் குறித்து சிபிஐ விசாரணை நடத்தப்படும். சமூகங்களுக்கு இடையிலான தவறான புரிதல் மறைந்து, விரைவில் இயல்புநிலை திரும்பும்.

இந்திய-மியான்மர் எல்லையில் வேலி அமைக்கும் பணிகள் விரைந்து முடிக்கப்படுவதே, எல்லை சார்ந்த பிரச்னைகளுக்கு நிரந்தரத் தீர்வாக அமையும்; போதைப் பொருள் கடத்தல், தீவிரவாதிகளின் நடமாட்டத்தை முழுமையாகத் தடுக்க முடியும் என்றார் அமித் ஷா.

**திட்டவட்டம்:** குகி சமூகத்தினர் அதிகம் வாழும் மாவட்டங்களுக்கு தனி நிர்வாகம் வேண்டுமென்பது அந்த சமூகத் தலைவர்களின் கோரிக்கையாக உள்ளது. இந்தக் கோரிக்கையை அரசு ஏற்கெனவே நிராகரித்துவிட்டது.

இது தொடர்பான செய்தியாளர்களின் கேள்விக்குப் பதிலளித்த அமித் ஷா, 'மணிப்பூரின் நிலம் சார்ந்த ஒருமைப்பாட்டில் மத்திய அரசு தனது நிலைப்பாட்டை ஏற்கெனவே தெளிவுபடுத்திவிட்டது. இந்த விவகாரத்தை பரபரபாக்கும் வகையில், நான் எந்தக் கருத்தையும் கூற விரும்பவில்லை.

**நிவாரண, மறுவாழ்வு உதவிகள்:** தற்போதைய வன்முறையில் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கான நிவாரண மற்றும் மறுவாழ்வு நிதித் தொகுப்பு விரைவில் அறிவிக்கப்படும். இந்த நிதி, சம்பந்தப்பட்ட குடும்பத்தினரின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக செலுத்தப்படும்.

நிபுணத்துவம் வாய்ந்த 20 மருத்துவர்களுடன் மருத்துவக் குழுக்கள், மணிப்பூருக்கு அனுப்பப்படவுள்ளது. மேலும், போட்டித் தேர்வுக்கு தயாராகும் மாணவர்களுக்கு தேவையான உதவிகள் செய்யப்படும்.

**மக்களுக்கு வேண்டுகோள்:** எந்தவிதமான வதந்திகளையும் மக்கள் நம்ப வேண்டாம். அந்த வகையில், மக்களுக்கு உதவ சிறப்பு உதவி எண்கள் அறிவிக்கப்படும். அரசுடனான அமைதி ஒப்பந்தத்தை மீறும் தீவிரவாதக் குழுக்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

உரிமமற்ற ஆயுதங்கள் வைத்திருப்போர், அரசிடம் உடனடியாக ஒப்படைக்க வேண்டுகோள் விடுக்கிறேன். பதுக்கிவைக்கப்பட்டுள்ள ஆயுதங்களைக் கண்டறிய காவல் துறையினர் வெள்ளிக்கிழமை முதல் சோதனையை தொடங்கவுள்ளனர். மாநிலத்தில் பாதுகாப்புப் படையினரின் கண்காணிப்பு நீடிக்கும் என்றார் அமித் ஷா.

**புதிய டிஜிபி:** மணிப்பூர் காவல் துறை புதிய டிஜிபியாக மூத்த ஐபிஎஸ் அதிகாரி ராஜீவ் சிங் வியாழக்கிழமை நியமிக்கப்பட்டார். 1993-ஆம் ஆண்டு திரிபுரா பிரிவு அதிகாரியான இவர், தில்லி சிஆர்பிஎஃப் தலைமையகத்தில் செயல்பாட்டு தலைமை ஆய்வாளராக உள்ளார்.

Activate Windows
Go to Settings to activate Windows.

# அக்னி-1 ஏவுகணை சோதனை வெற்றி

**புது தில்லி, ஜூன் 1:** நடுத்தர தொலைவு அக்னி-1 பாலிஸ்டிக் ஏவுகணை ஒடிஸாவின் ஏபிஜெ அப்துல் கலாம் தீவில் வியாழக்கிழமை வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'மிக உயர்ந்த நிலையிலிருந்து அக்னி-1 பாலிஸ்டிக் ஏவுகணை இலக்குகளைத் தாக்கும் திறன் கொண்டது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த ஏவுகணையின் செயல்பாடு மற்றும் தொழில்நுட்ப அம்சங்கள் அனைத்தும் வெற்றிகரமாக அமைந்தன' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 20 ஆண்டுகளாக பல்வேறு வகையிலான பாலிஸ்டிக் ஏவுகணைகள் தயாரிப்பிலும், அதன் தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதிலும் இந்திய அரசு தீவிரம் காட்டி வருகிறது. இதில் பல்வேறு வகையான அக்னி ஏவுகணைகளை இந்தியா தயாரித்துள்ளது. இதில், அணு ஆயுதங்களைத் தாங்கி 5,000 கி.மீ. தொலைவுக்குச் செல்லும் திறன் கொண்ட அக்னி-5 பாலிஸ்டிக் ஏவுகணையை இந்தியா கடந்த டிசம்பர் மாதம் வெற்றிகரமாக சோதனை செய்தது.



கோப்புப் படம்.

அக்னி 1 முதல் அக்னி 4 வரையிலான ஏவுகணைகள் 700 கி.மீ. முதல் 3,500 கி.மீ. தொலைவு வரை பாய்ந்து செல்லும் திறன் கொண்டவையாகும்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# உலக வானிலை அமைப்பின் துணைத் தலைவராக இந்திய இயக்குநர் தேர்வு

**புதுதில்லி,ஜூன் 1:** உலக வானிலை ஆய்வு அமைப்பின் துணைத் தலைவர்களில் ஒருவராக இந்திய வானிலை ஆய்வுத் துறை (ஐஎம்டி) இயக்குநர் மிருத்யுஞ்சய் மொஹபத்ரா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

உலக பருவநிலை மாற்றம், பருவநிலை முன்னெச்சரிக்கை மற்றும் பேரிடர் தயார்நிலைகளைக் கண்காணிப்பதற்காக ஜெனீவாவை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வரும் இந்த ஐ.நா. அமைப்பில் ஒரு தலைவர் மற்றும் 3 துணைத் தலைவர்கள் இடம்பெற்றிருப்பர்.

இந்த அமைப்பின் முதல் பெண் பொதுச் செயலராக ஆர்ஜென்டினாவைச் சேர்ந்த பேராசிரியர் செலஸ்டி சௌலோ நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த அமைப்பின் தலைவர் மற்றும் துணைத் தலைவர்களை நியமிப்பதற்கான தேர்தல் ஜெனீவாவில் வியாழக்கிழமை நடைபெற்றது. இதில், ஐக்கிய அரபு அமீரக தேசிய வானிலை ஆய்வு மைய இயக்குநர் அப்துல்லா அல் மண்டௌஸ் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இது 4 ஆண்டுகால பதவியாகும்.

அமைப்பின் துணைத் தலைவர்களாக ஐவரி கோஸ்ட் நாட்டின் வானிலை ஆய்வு மைய இயக்குநர் டௌடா கொனேட், ஐரிஷ் நாட்டின் வானிலை சேவைகள் இயக்குநர் இயோன் மோரன், இந்திய வானிலை ஆய்வுத் துறை இயக்குநர் மிருத்யுஞ்சய் மொஹபத்ரா ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.


அதுபோல, இந்த வார தொடக்கத்தில் அண்டார்டிக் ஒப்பந்த அமைப்பின் (ஏடிசிஎம்) துணைத் தலைவராக மத்திய புவி அறிவியல் செயலர் எம்.ரவிச்சந்திரன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவர்களுடைய தேர்வு, சர்வதேச வானிலை முன்னெச்சரிக்கை - பேரிடர் மேலாண்மை மற்றும் துருவ பகுதி ஆராய்ச்சியில் இந்தியா முக்கியப் பங்காற்ற வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# அல்கராஸ், ஜோகோவிச், சபலென்கா முன்னேற்றம்

**பாரீஸ், ஜூன் 1:** பிரான்ஸில் நடைபெறும் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் போட்டியான பிரெஞ்சு ஓபனில் ஸ்பெயினின் கார்லோஸ் அல்கராஸ், செர்பியாவின் நோவக் ஜோகோவிச், பெலாரஸின் அரினா சபலென்கா ஆகியோர் 3-ஆவது சுற்றுக்கு முன்னேறியிருக்கின்றனர்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு 2-ஆவது சுற்றில், உலகின் நம்பர் 1 வீரரான அல்கராஸ் 6-1, 3-6, 6-1, 6-2 என்ற செட்களில், ஜப்பானின் டேரோ டேனியலை வீழ்த்தினார். அடுத்த சுற்றில் அவர் கனடாவின் டெனிஸ் ஷபோவலோவை எதிர்கொள்கிறார்.



உலகின் 3-ஆம் நிலை வீரரான ஜோகோவிச் 7-6 (7/2), 6-0, 6-3 என்ற செட்களில் ஹங்கேரியின் மார்டன் ஃபுக்சோவிக்ஸை சாய்த்தார். அடுத்து அவர், ஸ்பெயினின் அலெக்ஸாண்ட்ரோ டேவிடோவிச்சை சந்திக்கிறார். ரஷியாவின் ஆண்ட்ரே ரூபலேவ் 6-4, 6-2, 3-6, 6-3 என்ற செட்களில் பிரான்ஸின் காரென்டின் மௌடெட்டை வென்றார்.

4-ஆம் இடத்திலிருக்கும் நார்வேயின் கேஸ்பர் ரூட் 6-3, 6-2, 4-6, 7-5 என்ற செட்களில் இத்தாலியின் கிலியோ ஜெபிரியை தோற்கடித்தார். 6-ஆம் இடத்திலிருக்கும் டென்மார்க்கின் ஹோல்கர் ரூனை சந்திக்க இருந்த பிரான்ஸின் கேல் மான்ஃபீல்ஸ், காயம் காரணமாக போட்டியிலிருந்து விலக, ரூன் 3-ஆவது சுற்றுக்கு தகுதிபெற்றதாக அறிவிக்கப்பட்டார். இதர ஆட்டங்களில், போட்டித்தரவரிசையில் 15-ஆவது இடத்திலிருக்கும் குரோஷியாவின் போர்னா கோரிச் வெற்றியை சந்திக்க, 18-ஆவது இடத்திலிருந்த ஆஸ்திரேலியாவின் அலெக்ஸ் டி மினார் தோல்வியைத் தழுவினார்.

**சபலென்கா வெற்றி:** மகளிர் ஒற்றையர் 2-ஆவது சுற்றில், உலகின் 2-ஆம் நிலை வீராங்கனையான பெலாரஸின் அரினா சபலென்கா, 7-5, 6-2 என்ற செட்களில் சக நாட்டவரான இரினா ஷைமானோவிச்சை சாய்த்தார். 3-ஆவது சுற்றில் அவர் ரஷியாவின் கமிலியா ரகிமோவாவை சந்திக்கிறார்.

## போபண்ணா ஜோடி அதிர்ச்சித் தோல்வி



ஆடவர் இரட்டையர் பிரிவில், போட்டித்தரவரிசையில் 6-ஆம் இடத்திலிருந்த இந்தியாவின் ரோஹன் போபண்ணா/ஆஸ்திரேலியாவின் மேத்யூ எப்தென் கூட்டணி முதல் சுற்றிலேயே 5-7, 6-7 (5-7) என்ற செட்களில் பிரான்ஸின் சேடியோ டூம்பியா/ஃபாபியன் ரீபௌல் இணையிடம் அதிர்ச்சித் தோல்வி கண்டது.

மற்றொரு இந்திய ஜோடியான ஜீவன் நெடுஞ்செழியன்/ஸ்ரீராம் பாலாஜி 3-6, 4-6 என்ற செட்களில் பெலாரஸின் இலியா இவாஷ்கா/ஆஸ்திரேலியாவின் அலெக்ஸி பாபிரின் இணையிடம் வீழ்ந்தனர். எனினும், சாகேத் மைனேனி/யூகி பாம்ப்ரி ஜோடி 6-3, 6-2 என்ற செட்களில் பிரான்ஸின் ஆர்தர் ரிண்டர்னெச்/என்ஸோ குவாகாட் கூட்டணியை சாய்த்து 2-ஆவது சுற்றுக்கு தகுதிபெற்றனர்.

போட்டித்தரவரிசையில் 5-ஆம் இடத்திலிருந்த பிரான்ஸின் கரோலின் கார்சியா 6-4, 3-6, 5-7 என்ற செட்களில் ரஷியாவின் அனா பிளிங்கோவாவிடம் அதிர்ச்சித் தோல்வி கண்டார். மற்றொரு ரஷிய வீராங்கனையும், போட்டித்தரவரிசையில் 9-ஆம் இடத்தில் இருப்பவருமான டரியா கசாட்கினா 6-3, 6-4 என செக் குடியரசின் மார்கெட்டா வோண்ட்ரோசோவாவை வீழ்த்தினார்.

4-ஆம் இடத்திலிருக்கும் கஜகஸ்தானின் எலனா ரைபாகினா 6-3, 6-3 என்ற நேர் செட்களில் செக் குடியரசின் லிண்டா நோஸ்கோவாவை வெளியேற்றினார். 20-ஆம் இடத்திலிருந்த அமெரிக்காவின் மேடிசன் கீஸ் 2-6, 6-4, 4-6 என்ற செட்களில் சக நாட்டவரான கேலா டேவிடம் அதிர்ச்சித் தோல்வி கண்டார்.



# ஆசிய ஜூனியர் ஹாக்கி: இந்தியா சாம்பியன்

**சலாலா, ஜூன் 1:** ஆசிய ஜூனியர் ஹாக்கி கோப்பை போட்டியில் பாகிஸ்தானை 2-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி இந்தியா நான்காவது முறையாக சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

ஓமனின் சலாலா நகரில் ஆசிய ஜூனியர் ஹாக்கி கோப்பை போட்டிகள் நடைபெற்று வந்தன. இறுதி ஆட்டத்துக்கு இந்தியாவும்-பாகிஸ்தானும் தகுதி பெற்றன. இந்நிலையில் வியாழக்கிழமை இரவு சலாலாவில் இறுதி ஆட்டம் நடைபெற்றது.




கோப்பையுடன் இந்திய அணியினர்.

தொடக்கம் முதலே இந்திய வீரர்கள் ஆதிக்கம் செலுத்திய நிலையில், 13-ஆவது நிமிஷத்திலேயே இந்திய வீரர் அங்கத் சிங் முதல் கோலடித்தார்.

மற்றொரு வீரர் அரைஜித் சிங் அடித்த பந்தை பாகிஸ்தான் தரப்பினர் திருப்பி அனுப்பிய நிலையில், அதை அற்புதமாக கோலாக்கினார் அங்கத் சிங்.

அடுத்த சிறிது நேரத்தில் 20-ஆவது நிமிஷத்தில் அரைஜித் சிங் ஹுண்டால் தனக்கு கிடைத்த பாஸை பயன்படுத்தி இரண்டாவது கோலை அடித்தார். முதல் பாதி முடிவில் 2-0 என இந்தியா முன்னிலை பெற்றிருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் பதில் கோலடிக்க பாக். தரப்பினர் மேற்கொண்ட தொடர் முயற்சியின் பலனாக 37-ஆவது நிமிஷத்தில் அப்துல் ஷாகித் கடத்தி அனுப்பிய பந்தை அபாரமாக கோலாக்கினார் அப்துல் பஷ்ராத். ஆட்டத்தின் கடைசி குவார்ட்டரில் பாக். தரப்பினர் கோலடிக்க மேற்கொண்ட முயற்சிகளை இந்திய அணியினர் முறியடித்தனர்.

இறுதியில் 2-1 என்ற கோல் கணக்கில் வென்ற இந்திய அணி சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

ஏற்கெனவே 2004, 2008, 2015 ஆண்டுகளில் பட்டம் வென்றுள்ளது இந்தியா.

எனினும் பெனால்டி கார்னர் வாய்ப்புகளை கோலாக மாற்றுவதில் இந்தியா பலவீனமாக உள்ளது வெளிப்படையாகத் தெரிந்தது.

சாம்பியன் பட்டம் வென்ற வீரர்களை ஹாக்கி இந்தியா தலைவர் திலிப் டிர்கே பாராட்டினார். ஒவ்வொரு வீரருக்கும் தலா ரூ.2 லட்சம் ரொக்கப் பரிசு அறிவித்தார். இந்த வெற்றி மூலம் ஜூனியர் உலகக் கோப்பை ஹாக்கிப் போட்டிக்கும் இந்தியா தகுதி பெற்றுள்ளது.

# சர்வதேச அமைதிக்கு முக்கிய அச்சுறுத்தல் பயங்கரவாதம்

## பிரிக்ஸ் கூட்டத்தில் அமைச்சர் எஸ். ஜெய்சங்கர்

**கேப்டவுன், ஜூன் 1:** உலக அமைதிக்கும், பாதுகாப்புக்கும் பயங்கரவாதம் முக்கிய அச்சுறுத்தலாக உள்ளது என்றும், இதை அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்து ஒடுக்க வேண்டும் என்றும் பிரிக்ஸ் கூட்டமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் வலியுறுத்தினார்.

பாகிஸ்தானை குறிப்பிடாமல் அவர் இவ்வாறு கூறினார்.

தென் ஆப்பிரிக்க தலைநகர் கேப்டவுனில் பிரேஸில், ரஷியா, இந்தியா, சீனா, தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகள் அடங்கிய பிரிக்ஸ் கூட்டமைப்பின் வெளியுறவு அமைச்சர்களின் கூட்டம் வியாழக்கிழமை தொடங்கியது.

மூன்று நாள்கள் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் ஆற்றிய தொடக்க உரை: சர்வதேச அமைதிக்கு அச்சுறுத்தலாக இருக்கும் காரணிகளில் பயங்கரவாதம் முக்கியமானதாக உள்ளது. பயங்கரவாதத்துக்கு நிதி உதவி, பிரசாரம் ஆகியவற்றை ஒடுக்க அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

சர்வதேச சூழல் மிகவும் சவாலாக உள்ளது. பிரிக்ஸ் நாடுகள் முக்கிய விவகாரங்களில் உறுதியான, ஒருமித்த முடிவு எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை நிலவுகிறது. உலக நாடுகளுக்குபிரிக்ஸ்கூட்டணைப்பு வலுவான தகவலை வெளிப்படுத்த வேண்டும். பழைய முன்னெடுப்புகள் இன்றைய பிரச்னைகளை தீர்க்காது. மாற்றத்துக்கு ஏற்ப செயல்பட வேண்டும்.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் மறுசீரமைப்பு செய்யப்பட வேண்டும். கடந்த 20 ஆண்டுகளாக இந்தக் கோரிக்கை முன்வைக்கப்படுகிறது. பல நாடுகள் பொருளாதார நெருக்கடியில் உள்ளன. சில நாடுகளே அதுகுறித்து கவலை கொள்கின்றன. பொருளாதார பரவலாக்கும் நிலையை பிரிக்ஸ் நாடுகள் முன்னெடுக்க வேண்டும் என்றார்.

**சந்திப்பு:** முன்னதாக, ரஷியா, சவூதி அரேபியா, தென் ஆப்பிரிக்கா நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களை இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் வியாழக்கிழமை சந்தித்து அந்த நாடுகளுடனான நல்லுறவு, சர்வதேச விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடத்தினார்.



தென் ஆப்பிரிக்க தலைநகர் கேப்டவுனில் ரஷிய வெளியுறவு அமைச்சர் செர்கேய் லாவ்ரோவை வியாழக்கிழமை சந்தித்த இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர்.

ரஷிய வெளியுறவு அமைச்சர் செர்கேய் லாவ்ரோவுடன் வியாழக்கிழமை நடைபெற்ற சந்திப்பின் போது, எதிர்வரும் பிரிக்ஸ், ஜி20, எஸ்சிஓ மாநாடுகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது என்று பின்னர் அமைச்சர் ஜெய்சங்கர் ட்விட்டர் பதிவில் தெரிவித்தார்.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பான எஸ்சிஓவின் அடுத்த மாநாட்டை ஜூலையிலும், ஜி-20 மாநாட்டை செப்டம்பரிலும் இந்தியா தலைமை வகித்து நடத்த உள்ளது குறிப்பிடத்தக்கது.

தென் ஆப்பிரிக்க வெளியுறவு அமைச்சர் நலேடி பாண்டோர் உடனான சந்திப்பு குறித்து அமைச்சர் ஜெய்சங்கர் ட்விட்டரில், '30 ஆண்டு நல்லுறவை வலுப்படுத்துவது குறித்து ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தை நடைபெற்றது' என்று பதிவிட்டிருந்தார்.

சவூதி அரேபியா வெளியுறவு அமைச்சர் பைசல் பின் ஃபரானுடனான சந்திப்பில் உலகச் சூழல் குறித்து விவாதிக்கப்பட்டது. இரு நாடுகளுடனான நல்லுறவு மேலும் வலுவடையும் என்று அமைச்சர் ஜெய்சங்கர் பின்னர் தெரிவித்தார்.

தென் ஆப்பிரிக்க பயணத்தை தொடர்ந்து ஜூன் 4 முதல் ஜூன் 6 வரை அமைச்சர் ஜெய்சங்கர் நமீபியா செல்கிறார்.

Activate Windows
Go to Settings to activate Windows.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# நிகழ் ராபி சந்தைப் பருவத்தில் கடந்த ஆண்டைவிட கூடுதலாக 74 லட்சம் மெட்ரிக் டன் கோதுமை கொள்முதல்

நமது சிறப்பு நிருபர்

**புது தில்லி, ஜூன் 1:** நிகழ் ராபி சந்தைப் பருவத்தில் கோதுமை கொள்முதல் கடந்த ஆண்டைவிட கூடுதலாக 74 லட்சம் மெட்ரிக் டன் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக மத்திய நுகர்வோர் நலன், உணவு, பொது விநியோகத் துறை அமைச்சகம் வியாழக்கிழமை தெரிவித்தது.

கடந்த மே 30-ஆம் தேதி வரை 262 லட்சம் மெட்ரிக் டன் கோதுமை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதே காலகட்டத்தில் கடந்த ஆண்டு 188 லட்சம் மெட்ரிக் டன் கொள்முதல் செய்யப்பட்டிருந்தது.

இதுகுறித்து மத்திய நுகர்வோர் நலன், உணவு, பொது விநியோகத் துறை அமைச்சகம் மேலும் தெரிவித்திருப்பதாவது:

நிகழாண்டு (2023-24) ராபி சந்தைப் பருவ கோதுமை கொள்முதல் சுமுகமாக நடைபெற்று வருகிறது. மே 30-ஆம் தேதி வரை 262 லட்சம் மெட்ரிக் டன் கோதுமை கொள்முதல் செய்யப்பட்டுள்ளதன்மூலம் சுமார் 21.27 லட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.



அவர்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையாக ரூ.47,000 கோடி வழங்கப்பட்டுள்ளது. அதிகபட்சமாக பஞ்சாப், மத்திய பிரதேசம், ஹரியாணா ஆகிய மாநிலங்களில் முறையே 121.27 லட்சம் மெ.டன், 70.98 லட்சம் மெ. டன், 63.17 லட்சம் மெ. டன் கோதுமை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இந்தக் கொள்முதல் நிகழ் ஜூன் இறுதிவரை தொடரும்.

நிகழாண்டு கொள்முதலில் பருவம் தவறி எதிர்பாராது பெய்த மழையால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கும் நிவாரணம் அளிக்கும் வகையில், கோதுமையின் தரக் குறியீடுகளில் மத்திய அரசு தளர்வு அளித்தது குறிப்பிடத்தக்கது. கூடுதலாக கிராம ஊராட்சிகள், கூட்டுறவு சங்கங்கள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் போன்றவை மூலமும் கொள்முதல் அனுமதிக்கப்பட்டது.

இதே சூழ்நிலை நெல் கொள்முதலுக்கும் உருவாக்கப்பட்டுள்ளது. நெல்லை பொருத்தவரை கடந்த மே மாதம் வரை, காரீஃப் (குறுவை) பருவத்தில் 385 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மேலும், 110 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்படும். இதுதவிர கூடுதலாக 106 லட்சம் மெட்ரிக் டன் ராபி பருவ நெல், காரீஃப் சந்தைப் பருவத்தில் (2022-23) கொள்முதல் செய்ய மதிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டின் உணவு தானியங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், 312 லட்சம் மெட்ரிக் டன் (எல்எம்டி) கோதுமை, 267 லட்சம் மெட்ரிக் டன் நெல் என மொத்தம் 579 லட்சம் மெட்ரிக் டன் மத்திய அரசின் தொகுப்பில் உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டில் ராபி பருவத்திலேயே கோதுமை அதிக அளவில் கொள்முதல் செய்யப்படுகிறது.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# 'உளவு செயற்கைக்கோளை செலுத்தியே தீருவோம்'

**சியோல், ஜூன் 1:** தங்களது உளவு செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தியே தீருவோம் என்று வட கொரிய அதிபர் கிம் ஜோங்-உன்னின் சகோதரி கிம் யோ-ஜாங் சூளுரைத்துள்ளார்.

கொரிய போர் முடிவுக்குப் பிறகு அந்த தீபகற்பப் பகுதியில் அமெரிக்காவும், தென் கொரியாவும் தொடர்ந்து கூட்டு ராணுவப் பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

இத்தகைய பயிற்சிகளை தங்கள் மீது படையெடுப்பதற்கான போர் ஒத்திகையாக வட கொரியா கருதுகிறது. அமெரிக்கா, தென் கொரியாவிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஏற்கெனவே அணு ஆயுத சோதனை நடத்தியுள்ள வட கொரியா, அந்த ஆயுதங்களை ஏந்திச் செல்லக் கூடிய பலிஸ்டிக் வகை ஏவுகணைகளையும் சோதித்தது. எனினும், அத்தகைய சோதனைகளுக்கு ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் தடை விதித்துள்ளது.

இந்த நிலையில், அமெரிக்கா மற்றும் தென் கொரியாவின் ராணுவ நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக உருவாக்கிய உளவு செயற்கைக்கோளை விண்ணில் செலுத்த வட கொரியா புதன்கிழமை முயன்றது. எனினும், செயற்கைக்கோளை ஏந்திச் சென்ற ராக்கெட் கட்டுப்பாட்டை இழந்து கடலில் விழுந்தது.

இந்த முயற்சிக்கு, தடை செய்யப்பட்ட பலிஸ்டிக் ஏவுகணை தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டது தவறு என்றும், வட கொரியாவின் உளவு செயற்கைக் கோளால் பிராந்திய நிலைத்தன்மை பாதிக்கப்படும் என்றும் அமெரிக்கா சாடியது.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் கிம் யோ-ஜாங் வியாழக்கிழமை கூறியதாவது:

இதுவரை ஆயிரக்கணக்கான உளவு செயற்கைக்கோள்களை அமெரிக்கா விண்ணில் செலுத்தி உலக நாடுகளை கண்காணித்து வருகிறது. வட கொரியாவின் நடவடிக்கைகளையும் அந்த செயற்கைக் கோள்கள் மூலம் அமெரிக்கா உன்னிப்பாக கவனித்து வருகிறது.

இந்த நிலையில், வட கொரியாவின் உளவு செயற்கைக்கோள் மட்டும் பிராந்திய நிலைத்தன்மையைக் குலைத்து விடும் என்று அமெரிக்கா கூறுவது நியாயமற்ற வாதமாகும்.

தேசிய பாதுகாப்புக்காக உளவு செயற்கைக்கோளை விண்ணில் நிறுத்துவது வட கொரியாவின் அடிப்படை இறையாண்மை உரிமையாகும். அத்தகைய செயற்கைக் கோள் ஒன்றை விரைவில் விண்ணில் செலுத்தியே தீருவோம் என்றார் அவர்.



கிம் யோ-ஜாங்

# உற்பத்தித் துறையில் 31 மாதங்கள் காணாத வளர்ச்சி

***புது தில்லி, ஜூன் 1:*** அதிகரிக்கும் கொள்முதல், சாதகமான சந்தை சூழல் போன்ற காரணங்களால் கடந்த மே மாதத்தில் இந்திய உற்பத்தித் துறை நடவடிக்கைகள் 31 மாதங்களில் இல்லாத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன.

இது குறித்து சந்தை ஆய்வு நிறுவனமான 'எஸ் அண்ட் பி குளோபல் மார்க்கெட் இன்டெலிஜென்ஸ்' வியாழக்கிழமை வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உற்பத்தித் துறை நடவடிக்கைகளுக்கான குறியீட்டு எண்ணான பிஎம்ஐ, கடந்த பிப்ரவரி மாதத்தில் 55.3-ஆக இருந்தது. பின்னர், 3 மாதங்களில் இல்லாத அதிகபட்ச அளவாக கடந்த மார்ச் மாதத்தில் அது 56.4-ஆக அதிகரித்தது. பின்னர் ஏப்ரல் மாதத்தில் அது 4 மாதங்களில் இல்லாத அதிகபட்சமாக 57.2-ஐ தொட்டது.



இந்த நிலையில் உற்பத்தித் துறை நடவடிக்கைகளுக்கான பிஎம்ஐ குறியீட்டு எண் கடந்த மே மாதத்தில் 58.7-ஆக அதிகரித்துள்ளது. இது, கடந்த 31 மாதங்கள் காணாத அதிகபட்ச பிஎம்ஐ ஆகும்.

இது, உற்பத்தித் துறையின் மிக விரைவான மற்றும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எடுத்துக் காட்டுகிறது.

இதன்மூலம், தொடர்ந்து 23-ஆவது மாதமாக உற்பத்தித் துறையின் பிஎம்ஐ குறியீட்டு எண் நடுநிலை வரம்பான 50-க்கும் மேலே உள்ளது.

அந்தக் குறியீட்டு எண் 50-க்கு மேல் இருந்தால் உற்பத்தியின் ஆரோக்கியமான போக்கையும், 50-க்கும் குறைவாக இருந்தால் பின்னடைவையும் குறிக்கிறது.

கடந்த மே மாதத்தில் கொள்முதல் ஆணைகள் அதிக எண்ணிக்கையில் குவிந்தது உற்பத்தி நிறுவனங்களுக்கு மிக வலுவான அடித்தளத்தை ஏற்படுத்தியது. சர்வதேச கூட்டுறவு போன்றவற்றால் சந்தைச் சூழலும் நிறுவனங்களுக்கு சாதகமாக இருந்தது. இதுபோன்ற காரணங்களால் அந்த மாதத்தில் உற்பத்தித் நடவடிக்கைகள் வளர்ச்சியைக் கண்டுள்ளன என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

EVA STALIN IAS ACADEMY